**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 35/2024**
**Prosecution Witness**:1

| | | | |
|---|---|---|---|
| Name | **சோமசுந்தரம்** (PW1) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th **day of February 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது எடக்காடு, கணபதிபாளையத்தில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்தவர் எனது அப்பா ஆவார். கடந்த 04.11.2023ம் தேதி மதிய அளவில் எனது ஊரை சேர்ந்த தங்கராஜ் என்பவர் எனக்கு போன் செய்து ராசன் என்பவர் உடல்நல குறைவால் இறந்துவிட்டதாக கூறினார். அப்போது நான் அவரது இறுதி சடங்கில் கலந்துகொள்வதற்காக பாசூரில் உள்ள மின்மயானத்திற்கு சென்றேன். அங்கு இறுதி சடங்கை முடித்த பிறகு எனது அப்பா பழனிச்சாமி மற்றும் ஊர்க்காரர்கள் 2262 என்ற பதிவெண் கொண்ட TATA INTRA வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது மேற்படி வாகனத்தை ஈஸ்வரமூர்த்தி தாறுமாறாக இயக்கி விபத்தை ஏற்படுத்தினார். ஆஜரில் உள்ள எதிரி தான் மேற்படி விபத்தை ஏற்படுத்தியவர். விபத்தை நானும் எனது அண்ணன் தங்கராசும் நேரில் பார்த்தோம். மேற்படி வாகனத்தில் பயணம்செய்த நபர்களுக்கு பலத்த அடிபட்டிருந்தது, எனது அப்பாவிற்கு காதிலும் மூக்கிலும் ரத்தம் வந்தது. எனது அப்பாவை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். விபத்தில் அடிபட்ட மற்ற நபர்களை 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மேற்படி விபத்தில் சுமார் 10,15 பேர் அடிபட்டிருப்பார்கள். ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் பணியில் இருந்த மருத்துவர் எனது அப்பாவை பரிசோதித்து விட்டு அவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார். பின்பு மறுநாள் காலை நான் மலையம்பாளையம் காவல்நிலையம் சென்று விபத்து சம்பந்தமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு** ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு வந்த மலையம்பாளையம் போலீசார் எனது தந்தையின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை நடத்தினார்கள். நான் உடன் இருந்து எனது தந்தையின் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.04 10:16:37 +0530

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

எதிரிக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.04 10:16:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 35/2024**
**Prosecution Witness**:2

| | | | |
|---|---|---|---|
| Name | தங்கராஜ் (PW2) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th **day of February 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது எடக்காடு, கணபதிபாளையத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்தவர் எனது அண்ணன் முறை ஆவார். அ.சா.1 சோமசுந்தரம் எனது அண்ணன் மகன் ஆவார். சுமார் இரண்டுவருடங்களுக்கு முன்பு எனது சித்தப்பா ராசன் என்பவர் இறந்துவிட்டதால் அவரது இறுதி சடங்கில் கலந்து கொள்வதற்காக பாசூரில் உள்ள சங்கமம் மின்மயானத்திற்கு சென்று இருந்தோம். காரியத்தை முடித்துவிட்டு கிளம்பும்போது எனக்கு முன்பாக 2262 என்ற பதிவெண் கொண்ட டாடா வாகனத்தில் நிறைய பேர் வீட்டிற்கு கிளம்பினார்கள். அதில் இறந்துபோன எனது அண்ணன் பழனியும் ஓட்டுநருக்கு அருகில் இடது பக்க சீட்டில் உட்கார்ந்திருந்தார். அப்போது வாகனத்தை இயக்கிய ஈஸ்வரன் அருகில் இருந்த சாக்கடைக்குள் வாகனத்தை இறக்கியதால் வாகனம் தலைகுப்புற கவிழ்ந்துவிட்டது. ஆஜரில் உள்ள எதிரி தான் மேற்படி விபத்தை ஏற்படுத்தியவர். பிறகு அங்கு சென்று பார்த்தபோது பழனிக்கு காதிலும், மூக்கிலும் ரத்தம் வந்தது. மற்றவர்களுக்கு அடிபட்டிருந்தது. எனது அண்ணன் பழனியை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். விபத்தில் அடிபட்ட மற்ற நபர்களை 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் பணியில் இருந்த மருத்துவர் எனது அண்ணன் பழனியை பரிசோதித்து விட்டு அவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார். **பின்பு** ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு வந்த

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.04 10:16:48 +0530

மலையம்பாளையம் போலீசார் எனது அண்ணன் பழனியின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை நடத்தினார்கள். நான் உடன் இருந்து பிரேதத்தை அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

எதிரிக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.02.04 10:16:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 35/2024**
**Prosecution Witness**:3

| Name | முருகன் (PW3) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th **day of February 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது எடக்காடு, கணபதிபாளையத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்தவர் எனது அண்ணன் மகன் ஆவார். சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பாசூரில் எனது உறவினரின் இறுதிசடங்கை முடித்துவிட்டு வாகனத்தில் வீடு திரும்பும் போது விபத்து ஏற்பட்டது. நான் பின்பக்க இருக்கையில் இருந்ததால் விபத்து எவ்வாறு நடந்தது என எனக்கு தெரியாது. விபத்து ஏற்படுத்தியவரை நான் பார்க்கவில்லை. மேற்படி விபத்தில் எனக்கு வலது கை உடைந்துவிட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 154ன் கீழ் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

கடந்த 04.11.2023ம் தேதி எனது உறவினர் ராசனின் இறுதிசடங்கில் கலந்துகொள்வதற்காக பாசூரில் உள்ள சங்கமம் மின்மயானத்திற்கு சென்றதாகவும், பின்பு இறுதி சடங்கை முடித்துவிட்டு வீட்டிற்கு திரும்பும் போது TN 33 BX 2262 என்ற பதிவெண் கொண்ட TATA INTRA வாகனத்தில் நானும் எங்கள் ஊரை சேர்ந்த பழனிசாமி, சண்முகம், சரவணன், மணியாள், கந்தசாமி, சொர்ணம்மாள், மூர்த்தி மற்றும் சிலர் புறப்பட்ட போது மேற்படி வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரரையாகவும்ஓட்டிசென்று சங்கம் எறி மேடைக்கு முன்பாக உள்ள விவசாய பூமியில் வாகனத்தை கவிழ்த்து விபத்து ஏற்படுத்தியதாகவும் இந்த விபத்தினால் எனக்கு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.04 10:16:56 +0530

காயம் ஏற்பட்டதாகவும், பழனிச்சாமிக்கு பலத்த அடிபட்டு மூச்சு பேச்சு இன்றி இருந்ததாகவும், மற்றவர்களுக்கும் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், மேற்படி விபத்தினால் பழனிச்சாமி சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாகவும், கூறிவிட்டு தற்போது நான் எதிரியை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து எதிரியை யார் என்று தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :—**

எதிரிக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை:— இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.04 10:16:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 35/2024**
**Prosecution Witness**:4

| | | | |
|---|---|---|---|
| Name | கண்ணுச்சாமி (PW4) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th **day of February 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது எடக்காடு, கணபதிபாளையத்தில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 05.11.2023ம் தேதியன்று காலை சுமார் 07.30 மணியளவில் பாசூர் சங்கமம் மின்மயானத்திற்கு மலையம்பாளையம் போலீசார் விபத்து வழக்கு சம்பந்தமாக வரைபடம் வரைவதாகவும், அதற்கு சாட்சியாக இருக்கும்படி என்னையும், சந்திரன் என்பவரையும் கேட்டுக்கொண்டார்கள். அதற்காக நானும் சந்திரன் என்பவரும் கையொப்பம் செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

எதிரிக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.04 10:17:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.